# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - **9**, No.**8**, பாரதியார் **2** வது தெரு,* S.S. *காலனி மதுரை – **10**.* Ph. 0452 – 4354302


## பரிசுத்த ஆவியானவர் (பகுதி – 2)

*(சிருஷ்டிப்பில், பழைய ஏற்பாட்டில், வேதாகமத்தில், கிறிஸ்துவின் வாழ்க்கையில், அவிசுவாசிகளின் மத்தியில், பரிசுத்த ஆவியானவரின் பணி)*

### முன்னுரை :

இந்தப் பாடம் "**பரிசுத்த ஆவியானவர்**" என்ற தலைப்பில் படிக்கும் மூன்று பாடங்களின் தொடர்ச்சியே ஆகும். பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆள், அவர் **வெறும் சக்தி அல்ல** என்று நாம் **6**–ம் பாடத்தில் கற்றுக்கொண்டோம். பரிசுத்த ஆவியானவராகிய தெய்வம் பரிசுத்த திரித்துவத்தில் மூன்றாம் நபராக இருக்கிறார். தெய்வத்திற்குரிய எல்லாத் தன்மைகளையும், குணாதிசயங்களையும் கொண்டுள்ளார் என்பதை நாம் பார்த்தோம், பரிசுத்த ஆவியானவருக்கு பயன்படுத்தப்பட்டுள்ள நாமங்கள் (பெயர்கள்) அவரின் குணத்தை வெளிப்படுத்தக்கூடியதாகவும், வேதாகமத்தில் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள அடையாளங்கள் அவரின் சுபாவத்தையும், பணிகளையும் விளக்குகிறது என்பதை நாம் படித்தோம்.

சிருஷ்டிப்பில், பழைய ஏற்பாட்டில், வேதாகமத்தில், கிறிஸ்துவின் வாழ்க்கையில், அவிசுவாசிகளின் மத்தியில் பரிசுத்த ஆவியானவரின் பணி என்ன என்பதைக் குறித்து இப்பாடத்தில் நாம் படிக்க இருக்கிறோம்.

### இப்பாடத்தின் முக்கியத்துவம் :

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும், பரிசுத்த ஆவியானவரின் பணியைக் குறித்து நமக்குப் பூரணமான கண்ணோட்டம் இருக்கும்பொழுது மாத்திரமே அவரின் **நிலையையும், தன்மையையும், வல்லமையையும்** உண்மையாக நாம் அறிந்துகொள்ளமுடியும். பரிசுத்த ஆவியானவருடைய பணியின் எல்லையை நாம் பார்க்கவேண்டுமென்றால், அவரை ஒரு வல்லமையாகவோ, அல்லது நம்முடைய வாழ்க்கையில் நிகழக்கூடிய ஒரு அனுபவமாகவோ பார்க்காமல், அவரை அறிந்து அவரிடத்தில் அன்பும், நம்பிக்கையும் வைத்து, அவரையே சார்ந்து **அவருக்கு கீழ்படிகிற நிலையில்** அவரைப் பார்க்கவேண்டும். பரிசுத்த ஆவியானவரையும், அவருடைய சிறப்பான பணியையும் குறித்து நீங்கள் தெளிவாகவும், விவரமாகவும், முழுமையாகவும் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக ஜெபத்துடன் இப்பாடம் தயார் செய்யப்பட்டுள்ளது.

**பாடம்**

## I. சிருஷ்டிப்பில் பரிசுத்த ஆவியானவரின் பணி :

அ. முதலாவது, ஆதியாகமத்தில் திரியேக தேவனின் செயல்களைக் கவனிக்கவும்.

1. ஆதியாகமம் 1:26 .. "**நமது** சாயலாகவும் **நமது** ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக."

**குறிப்பு :**

இவ்வசனம் திரியேக தேவனின் சாயலுக்கு ஒப்பாக மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான் என்பதை நிரூபிக்கிறது.

2. ஆதியாகமம் 11:7 .. "**நாம்** இறங்கிப் போய் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார்."

**குறிப்பு :**

இவ்வசனம் ஆதியிலிருந்தே பரிசுத்த ஆவியானவர் தீவிரமாகச் செயல்பட்டு வந்தார் என்பதை நிரூபிக்கிறது.

ஆ. இரண்டாவது, உலக சிருஷ்டிப்பில் பரிசுத்த ஆவியானவர் தீவிரமாகச் செயல்பட்டார்.

1. ஆதியாகமம் 1:2 .. "தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்."
2. யோபு 26:13 .. "தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார்."
3. சங்கீதம் 33:6 .. "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் உண்டாக்கப்பட்டது."

கொலோசெயர் 1:16,17, எபிரெயர் 1:2 வசனங்கள் இயேசுகிறிஸ்துவே சிருஷ்டி கர்த்தர் என்பதை நிருபிக்கிறது. இருப்பினும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் இம் மூவரும் சேர்ந்தே இவ்வுலகத்தை உருவாக்கினார்கள் என்பது மிகவும் தெளிவாய் இருக்கிறது.

**குறிப்பு :**

மேற்கண்ட வசனங்கள் எல்லாம் பழைய, புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் பரிசுத்த ஆவியானவரே தேவனுடைய வல்லமையை செயல்படுத்தும் பிரதிநிதியாக விளங்கினார் என்பதை நிரூபிக்கிறது.

இ. மூன்றாவது, மனித சிருஷ்டிப்பில் பரிசுத்த ஆவியானவர் நேரடி ஈடுபாடு கொண்டார்.

1. ஆதியாகமம் 2:7 .. "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, **ஜீவசுவாசத்தை** அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்."

**குறிப்பு :**

பரிசுத்த ஆவியாவனரின் பணியை விளக்குவதற்கு வேதாகமத்தில் **ஜீவசுவாசம்** (தேவனுடைய சுவாசம்) என்ற வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது."

2. யோபு 33:4 .. "தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார்; சர்வவல்லவருடைய **சுவாசம்** எனக்கு உயிர் கொடுத்தது."

## II. பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியாவனரின் பணி :

அ. உலகத்தின் பொருள்களையும், மனிதனையும் சிருஷ்டிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் பங்கு பெற்றார் (ஆதியாகமம் 1:2; 2:7).

ஆ. பரிசுத்த ஆவியானவர் பாவிகளோடு போராடி தீங்கைத் தடுக்கிறார்.

ஆதியாகமம் 6:3 .. இவ்வேதப்பகுதியோடு 2 தெசலோனிக்கேயர் 2:6,7–வது வசனங்களை ஒப்பிட்டுப்பார்க்கவும். இங்கும் பரிசுத்த ஆவியானவரே அக்கிரமத்தை தடைசெய்கிறதாக வாசிக்கிறோம்.

இ.பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்குள் தங்கி இருக்கிறார்.

1. ஆதியாகமம் 41:38 .. "தேவ ஆவியைப் பெற்ற மனிதன்"
2. சங்கீதம் 51:11 .. "உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமல் இரும்."
3. 1 பேதுரு 1:11 .. "தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் இன்ன காலத்தை குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்."
4. எண்ணாகமம் 27:18 .. "ஆவியை பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா"

ஈ. பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் மேலிறங்கி அதிகமான வல்லமையைக் கொடுத்தார்.

1. எண்ணாகமம் 11:26–29, எல்தாத், மேதாத் மேல் ஆவியானவர் இறங்கியதால் அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.
2. நியாயாதிபதிகள் 3:10, ஒத்னியேல் மேல் கர்த்தருடைய ஆவி வந்திறங்கினதால் அவன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து யுத்தம்பண்ணப் புறப்பட்டான்.
3. நியாயாதிபதிகள் 6:34, கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன் மேல் இறங்கினதால் அவன் பெரிய வெற்றியை அடையும்படி செய்தார்.
4. நியாயாதிபதிகள் 14:6, கர்த்தருடைய ஆவியானவர் சிம்சோன் மேல் பலமாய் இறங்கினதால், அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும் சிங்கத்தை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப் போடுகிறது போல் கிழித்துப்போட்டான்.
5. 1 சாமுவேல் 16:13, அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்.

**குறிப்பு :**

புதிய ஏற்பாட்டின் காலத்தில் விசுவாசிகளின்மேல் வருகிற பரிசுத்த ஆவியானவரின் பணி எப்பொழுதுமே தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்கும்போது பிரசங்கத்தின் மூலமாக தேவனுடைய வல்லமையை விளக்கும் சான்றாக உள்ளது. இதை நினைவிற்கொள்ளவேண்டியது அவசியமாக இருக்கிறது (அப்போஸ்தலர் 1:8).

உ. சில விசுவாசிகளை பரிசுத்த ஆவியானவர் நிரப்பினார் :

1. பெசலயேல் .. தேவன் பெசலயேலை தேவஆவியினாலே நிரப்பினார் (யாத்திராகமம் 31:5;35:33).
2. யோசுவா .. யோசுவா ஞானத்தின் ஆவியால் நிறையப்பட்டான் (உபாகமம் 34:9).
3. எலியா .. எலியா ஆவியினால் நிரப்பப்பட்டது போல யோவான் ஸ்நானகனும் ஆவியால் நிரப்பப்படுவான் (லூக்கா 1:17).

4. ஆரோனுக்கு வஸ்திரங்களை உண்டாக்கினவர்கள் .. ஞானத்தின் ஆவியால் நிரப்பப்பட்டனர் (யாத்திராகமம் 28:3).

<u>குறிப்பு :</u>

மேலே கொடுக்கப்பட்ட வேத பகுதியானது பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் ஞானத்தையும், கைத்திறமையையும் கொடுத்தார் (யாத்திராகமம் 31:2–5). சிம்சோனுக்கு சிறப்பான வல்லமையை கொடுத்தார் (நியாயாதிபதிகள் 14:6). தனிப்பட்ட நபர்களின் மேல் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் இறங்கினதினால் அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். அது மட்டுமல்லாமல் பெரிய காரியங்களையும் செய்தார்கள் (2 சாமுவேல் 23:2; நியாயாதிபதிகள் 15:14).

பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் தம்முடைய தெய்வீக சித்தத்தின்படி செயல்பட்டார் என்பதை மனதில் கொள்ளவேண்டும். அவர் யார்மேல் வர விரும்பினாரோ அவர்கள் மேலும், யாரை நிரப்பச் சித்தம் கொண்டாரோ அவர்களை நிரப்பவும் செய்தார்.

பரிசுத்த ஆவியானவரையும், அவருடைய வல்லமையையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற போதனை இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுக்கப்படவில்லை. ஆனால் வருங்காலத்தில் ‘‘மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்’’ என்ற வாக்குத்தத்தமானது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது (ஏசாயா 44:3; யோவேல் 2:28).

## III. வேதவசனத்தைப் பொருத்த அளவில் பரிசுத்த ஆவியானவரின் பணி :

அ. வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (2 தீமோத்தேயு3:16).ஆங்கில வேதாகமத்தில் ‘INSPIRATION’ என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ‘தெய்வீக உள்ளூக்கம்’, ‘தெய்வீக அகத்தூண்டுதல்’ அல்லது ‘தேவன் சுவாசித்தார்’ என பொருள்படும்.

ஆ. சுவாசித்தது யார்? (2 பேதுரு 1:21) ‘‘தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசினார்கள்.’’

இ. வெளிப்படுத்தின விசேஷம் 2,3–ஆம் அதிகாரத்தின் வார்த்தைகள் பரிசுத்த ஆவியானவருடைய வார்த்தைகள் ஆகும்.

வெளிப்படுத்தின விசேஷம் 2:11,17; 3:6,13,22

ஈ. சத்திய ஆவியாகிய அவர் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தி வரப்போகிற காரியங்களை அவர்களுக்கு காண்பித்தார் (யோவான் 16:13).

<u>குறிப்பு :</u>

இங்கே மறுபடியும் தேவனுடைய – ‘‘சுவாசம்; கண்களால் காண முடியாததாயினும், அது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுள்ள பணியே ஆகும்’’

பழைய, புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் தங்களின் பிரத்தியேகக் குணத்தையோ அவர்களின் இலக்கிய நடையையோ மறுத்தார்கள் என்று மேலே கூறப்பட்ட வேத வாக்கியங்கள் குறிப்பிடவில்லை. அற்புதமாக தேவன் தம்முடைய நோக்கத்தையும், சிந்தையையும், சித்தத்தையும் எழுத்தாளர்களுக்கு வெளிப்படுத்தி (தெய்வீக அகத்தூண்டுதல் மூலம்) வேத வசனங்களை எழுதும்படி செய்தார் என்று மேலே கொடுக்கப்பட்டுள்ள வேத பகுதியானது நமக்குத் தெரிவிக்கிறது. தேவன் தாமே வேதவசனங்களை மூல பாஷையிலே கொடுத்தார். இவ்வேத வசனங்கள் முழுவதும் பிழையின்றி சரியாக தேவ ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டுள்ளன.

## IV. கிறிஸ்துவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் பணி :

அ. இயேசுகிறிஸ்து அற்புதமாக மரியாளிடத்தில் உற்பத்தியானது பரிசுத்த ஆவியினால் உண்டானது (மத்தேயு 1:20; லூக்கா 1:35).

ஆ. இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினவுடனே தேவஆவி புறாவைப்போல அவர்மேல் இறங்கினார் (லூக்கா 3:22; மத்தேயு 3:16).

இ. நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார் (அப்போஸ்தலர் 10:38).

ஈ. கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலே நிறைந்து அவராலே நடத்தப்பட்டார் (லூக்கா 4:1,14). பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே அவர் அற்புதங்கள் செய்தார் (லூக்கா 4:18; மத்தேயு 12:28).

உ. இந்த உலகத்தில் கிறிஸ்து மாம்சத்தில் இருந்தபொழுது அவருடைய ஞானத்திற்கு பரிசுத்த ஆவியானவரே மூலகாரணம் (மத்தேயு 12:17–21).

ஊ.தேவ ஆவியின் வல்லமையினாலே கிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் (ரோமர் 1:5; 8:11).

எ. கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்டார் (அப்போஸ்தலர் 1:1).

**குறிப்பு :**

இயேசுவானவர் இந்த உலகத்தில் மனிதனாக இருந்தபொழுது ஞானத்திற்கும், வல்லமைக்கும், வழிகாட்டுதலுக்கும் பரிசுத்த ஆவியானவரையே முழுவதுமாக சார்ந்திருந்தார். இவர் நமக்கு ஒரு மாதிரியாக இருக்கிறார் (1 பேதுரு 2:21).

கிறிஸ்து வாழ்வதற்கும், ஊழியம் செய்வதற்கும் பரிசுத்த ஆவியானவரை சார்ந்திருக்க வேண்டியது அவசியமானால், நாமும் அவரையே சார்ந்து ஜீவிக்கவேண்டியது எவ்வளவு அவசியமாய் இருக்கிறது.

ஆசீர்வாதங்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்ள நாம் தவறக்கூடாது. இயேசுகிறிஸ்துவுக்குச் செய்த யாவையும் பரிசுத்த ஆவியானவர் நமக்கும் செய்வார். நாமும்கூட பரிசுத்த ஆவியானவராலே அபிஷேகம் பண்ணப்பட்டு, ஆளப்பட்டு, நடத்தப்பட முடியும்.

## V. அவிசுவாசிகளின் மத்தியில் பரிசுத்த ஆவியானவரின் பணி :

அ. கிறிஸ்துவை வெளிப்படுத்துவதும், அவரை மேன்மைப்படுத்துவதுமே ஆவியானவரின் முதற்பணி

1. யோவான் 15:26, சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது ‘‘அவர் என்னைக்குறித்து சாட்சி கொடுப்பார்.’’
2. யோவான் 16:13,14, சத்திய ஆவியாகிய அவர் வரும்போது அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.
3. அப்போஸ்தலர் 5:32, இந்தச் சங்கதிகளைக் குறித்து நாங்கள் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாயிருக்கிறோம். தேவன் தமக்குக் கீழ்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்.

**குறிப்பு :**

எந்த ஒரு ஊழியமோ அல்லது போதனையோ கிறிஸ்துவை மகிமைப்படுத்தவில்லை என்றால், அவை பரிசுத்த ஆவியானவரால் உண்டானதோ என சந்தேகிக்க வேண்டியதாகவே இருக்கும். சத்திய ஆவியானவர் சத்தியத்தைக் (கிறிஸ்துவை) குறித்து சாட்சி கொடுக்கிறார் (யோவான் 14:6,17; 15:26)

**குறிப்பு :**

பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட முறையில் கிறிஸ்துவை பாவிகளுக்கு வெளிப்படுத்தும் பொழுது வழக்கமாக விசுவாசிகளைக் கொண்டே செயல்படுகிறார். அவர்களுக்காக அவர் அனுப்பப்பட்டும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டும் இருக்கிறார் (யோவான் 15:26; 16:7,8). விசுவாசிகளாகிய நாம் சிலாக்கியம் பெற்றவர்கள், அதே வேளையில் கிறிஸ்துவை உலகத்திற்கு தெரிவிக்கவேண்டிய பொறுப்பும் நமக்கு இருக்கிறது. அப்படி இருந்தும் நம்முடைய திறமையினாலோ, சாட்சியினாலோ மனிதர்களை நம்ப வைக்க முடியாது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் மட்டும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கச் செய்ய முடியும் என்பதை எப்பொழுதும் மறந்து விடக்கூடாது. பரிசுத்த ஆவியினால் மட்டுமே இயேசுவைக் கர்த்தர் என்று மக்கள் அறிக்கையிடுகிறார்கள் (1 கொரிந்தியர் 12:3).

ஆ. பாவத்தை உணர்த்தவும், பாவி என்று ஒத்துக்கொள்ளவும் செய்வதே பரிசுத்த ஆவியானவருடைய இரண்டாவது பணி

1. யோவான் 16:8–11 .. ‘‘அவர் வந்து உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.
   - அ. கிறிஸ்துவை விசுவாசிக்கத் தவறுகிற பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்துவார் (மனிதனுடன் உள்ள தொடர்பு).
   - ஆ. கிறிஸ்துவின் நீதியைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார் (கிறிஸ்துவுடன் உள்ள தொடர்பு) அதாவது இயேசுகிறிஸ்து பிதாவிடத்திற்குத் திரும்பிப்போவதால் அவருடைய நீதியைக்குறித்து கண்டித்து உணர்த்துவார்
   - இ. கல்வாரி சிலுவையில் கிறிஸ்து சாத்தானை நியாயந்தீர்த்த அந்த நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார் (சாத்தானுக்கு தொடர்புடையது).
2. பரிசுத்த ஆவியின் வல்லமையினால் வசனத்தை பிரசங்கிக்கும்பொழுது பாவி உணர்த்தப்படுகிறான்.
   - அ. அப்போஸ்தலர் 2:4 .. சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்
     அப்போஸ்தலர் 2:37 .. பாவிகள் தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டார்கள்.

ஆ. அப்போஸ்தலர் 4:8 .. பேதுரு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்.

அப்போஸ்தலர் 4:13 .. பாவிகள் ஆச்சரியப்பட்டார்கள்.

3. பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதல் மனந்திரும்புதலுக்கும், விசுவாசித்தலுக்கும் நடத்திச் செல்கிறது.

அ. அப்போஸ்தலர் 2:37 .. நாங்கள் என்ன செய்ய வேண்டும்

அப்போஸ்தலர் 2:38 .. நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆ. ரோமர் 10:17 .. விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும், ஆவியின் பட்டயம் தேவனுடைய வசனம். இதை அவருடைய வல்லமையினால் உபயோகிக்கும்பொழுது மட்டும் மனிதர்கள் தங்களுடைய பாவத்தைக் குறித்து உணர்ந்து மனந்திரும்பி, தேவனிடத்திற்கு திரும்புவார்கள் என்பதை எப்பொழுதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

## இறுதி விளக்கம் :

திரித்துவ தெய்வத்தில் ஒருவராகிய பரிசுத்த ஆவியானவரை நீங்கள் அறிந்து, அவரில் அன்புகூர்ந்து அவரை தொழுதுகொள்வது மட்டுமல்லாமல் அவருக்குக் கீழ்ப்படிந்து அவரைச் சேவிக்க இந்தப் பாடங்கள் உங்களுக்கு உதவ வேண்டும் என்பதே எங்களது ஊக்கமான ஜெபம். இறுதியாக பரிசுத்த ஆவியானவரைக் குறித்து படிக்க இருக்கின்ற கடைசி பாடங்களில் ''விசுவாசிகளின் மத்தியில் அவருடைய வேலை'', ''அவருடைய வரங்கள்'', ''ஞானஸ்நானம்'', ''பரிபூரணம்'', ''வல்லமை'' என்ற தலைப்பில் படிக்க இருக்கிறோம்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# பரிசுத்த ஆவியானவர் (பகுதி – 2)

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. சிருஷ்டிப்பில் பரிசுத்த ஆவியானவர் பங்கெடுத்தார் என்பதைக் காண்பிக்கும் வசனத்தைக் குறிக்கவும். **(இரண்டை** வட்டமிடவும்)
   a. ஆதியாகமம் 1:2
   b. நியாயாதிபதிகள் 6:34
   c. ஆதியாகமம் 41:38
   d. சங்கீதம் 33:6
2. மனித சிருஷ்டிப்பில் பரிசுத்த ஆவியானவர் பங்கெடுத்தார் என்பதைக் காண்பிக்கும் வசனத்தைக் குறிக்கவும். **(இரண்டை** வட்டமிடவும்)
   a. ஆதியாகமம் 11:7
   b. யோபு 33:4
   c. சங்கீதம் 33:6
   d. ஆதியாகமம் 2:7
3. 2 தெசலோனிக்கேயர் 2:6,7 வசனங்களின்படி, இந்த உலகத்தில் பரிசுத்த ஆவியானவரின் பணி என்ன ?
   a. அவர் உலகப்படையில் பங்கெடுத்தார்
   b. அவர் உலகத்தில் பாவ மனுஷன் வெளிப்படாமல் தடை பண்ணுகிறார்
   c. பிசாசோடு மக்கள் எதிர்த்துப் போராடுவதற்கு அவர் உதவுகிறார்
4. வேதாகமம் எப்படி கிடைத்தது ?
   a. வேதாகமம் பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டது
   b. வேதாகமம் தேவனால் சொல்லப்பட்டு எழுதப்பட்டது
   c. வேதாகமம் தேவனின் சொந்தக் கரத்தால் எழுதப்பட்டது
5. தேவன் வேதாகமத்தை எழுதுவதற்கு யாரைப் பயன்படுத்தினார் ?
   a. தேவன் பரிசுத்த மனிதர்களைப் பயன்படுத்தி எழுதினார்
   b. தேவன் தேவதூதர்கள் மூலமாக பரிசுத்த மனிதர்களுக்குக் கொடுத்தார்
   c. தேவன் எழுதி பரிசுத்த மனிதர்களிடத்தில் கொடுத்தார்
6. வேதாகமம் பல்வேறு நடைமுறையில் எழுதப்பட்டுள்ளது, காரணம்
   a. அனைத்து ஆசிரியர்களும் படிக்காதவர்கள்
   b. பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு ஆசிரியரையும் அவர்களின் தனித்தன்மைக்கு ஏற்ப பயன்படுத்தினார்
   c. வேதாகமம் தேவ வார்த்தையல்ல, மனிதனின் சொந்தக் கருத்துக்களாகும்

7. வேதாகமத்தில் எந்த ஒரு தவறும் இல்லை, காரணம்

   a. வேதாகமத்தை எழுதிய ஆசிரியர்களை தேவஆவியானவரால் ஆட்கொண்டு நடத்தினார்

   b. தேவன் தம்முடைய சொந்தக் கரத்தினால் எழுதினார்

   c. ஆசிரியர்கள் செய்த தவற்றை அவர் திருத்தினார்

8. இயேசுவானவர் தாம் பூமியில் இருந்தபொழுது தம்மை வழிநடத்துவதற்கு யாரைச் சார்ந்திருந்தார் ?

   a. சீஷர்கள்

   b. பரிசுத்த ஆவியானவர்

   c. நண்பர்கள்

9. அவிசுவாசிகளின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் செய்வது என்ன ? **(இரண்டை** வட்டமிடவும்)

   a. கிறிஸ்து யார் என்று அவர்களுக்குக் காண்பிக்கிறார்

   b. தேவனுக்காக நிற்பதற்கு அவர்களுக்கு உதவுகிறார்

   c. அவிசுவாசிகளின் வாழ்க்கையில் அவர் எதையும் செய்வதில்லை

   d. பாவத்தை உணர்த்துகிறார்

10. கிறிஸ்துவைக்குறித்து பரிசுத்த ஆவியானவர் இன்றைக்கு செய்வது என்ன ?

    a. பரலோகத்தில் கிறிஸ்துவை கவனித்துக் கொள்கிறார்

    b. உலகத்தில் கிறிஸ்துவின் நாமத்தை உயர்த்துகிறார்

    c. கிறிஸ்துவைக்குறித்து விசுவாசிகளுக்குத் தரிசனம் கொடுக்கிறார்

11. **பொருத்துக :–** கிறிஸ்துவைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கும் வாக்கியத்திற்கு முன் சரியான வசனத்தை எழுதவும்.

| | | |
|---|---|---|
| -------- | இயேசுவே கர்த்தர் என்று மக்கள் சொல்வதற்கு ஆவியானவர் உதவுகிறார் | a. யோவான் 16:8–11 |
| -------- | அவிசுவாசிகள் அனைவரும் குற்றவாளிகளென ஆவியானவர் உணர்த்துகிறார் | b. ரோமர் 10:17 |
| -------- | கேள்வி தேவனுடைய வசனத்தின்மூலம் வருகிறது | c. 1 கொரிந்தியர் 12:3 |

12. “தெய்வீக உள்ளூக்கம்” (Inspiration) என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன ? எந்த வேத வசனத்தில் இவ்வார்த்தை இடம் பெற்றுள்ளது ?

    ------------------------------------------------------------------------

    ------------------------------------------------------------------------

13. பழைய ஏற்பாட்டில் உள்ள விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியானவர் எவ்விதம் ஊழியம் செய்தார் ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

    எண்ணாகமம் 11:26–29 ------------------------------------------------------------

    நியாயாதிபதிகள் 3:10 ------------------------------------------------------------

    நியாயாதிபதிகள் 6:34 ------------------------------------------------------------

14. கிறிஸ்துவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு செயல்பட்டார்? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

மத்தேயு 1:20 ------------------------------------------------------------------

லூக்கா 3:22 ------------------------------------------------------------------

மத்தேயு 12:28 ------------------------------------------------------------------

ரோமர் 1:4 ------------------------------------------------------------------

15. பரிசுத்த ஆவியானவர் உணர்த்தப்படும்பொழுது, இருதயத்தில் நிகழக்கூடிய **இரண்டு** காரியங்கள் எவை?

1. ------------------------------

2. ------------------------------

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

பதிவு எண் : ____________________

முழு பெயர் : ____________________________________________

முகவரி : ____________________________________________

____________________________________________